

பாமாலை 106 A கண்டீர்களோ சிலுவையில்

1 கண்டீர்களோ சிலுவையில்
மரிக்கும் யேசுவை
கண்டீர்களோ காயங்களில்
சொரியும் ரத்தத்தை

2 மன்னியும் என்ற வேண்டலை
கேட்டீர்களே ஐயோ
ஏன் கைவிட்டீர் என்றார் அதை
மறக்கக் கூடுமோ

3 கண் மூடி தலை சாயவே
முடிந்தது என்றார்
இவ்வாறு லோக மீட்பையே
அன்பாய் உண்டாக்கினார்

4 அவ்வேண்டல் ஓலம் காயத்தால்
ஈடேற்றம் வந்ததே
ஆ பாவி இதை நோக்குங்கால்
உன் தோஷம் தீருமே

5 சீர் கெட்டு மாண்டு போகையில்
பார்த்தேன் என் மீட்பரை
கண்டேன் கண்டேன் சிலுவையில்
மரிக்கும் என் யேசுவை